


முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.12.2025) முகாம் அலுவலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாகு, காலநிலை மாற்றம் தொடர்பான செயல்பாடுகளில் உலக அளவில் தமிழ்நாடு சிறப்பான இடத்தைப் பெற ஆர்வத்துடன் உழைத்தமைக்காக UNEP அமைப்பின் Champions Of The Earth விருதினை பெற்றுள்ளதை யொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், திருமதி. துர்கா ஸ்டாலின் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.12.2025) சென்னையில் நடைபெற்ற ஒன்றிய முன்னாள் இரயில்வே துறை இணை அமைச்சர் ஏ.கே.மூர்த்தி அவர்களின் மகன் ஏ.கே.விஜய்மகேஷ் – எம்.நிவேதா ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் அமைச்சர் தா.மோ. அன்பரசன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.12.2025) முகாம் அலுவலகத்தில், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் சி.எச்.சேகர் தனது திருமணநாளையொட்டி குடும்பத்துடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். திருமதி. துர்கா ஸ்டாலின் உடன் உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.12.2025) முகாம் அலுவலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஆர் இளங்கோ மகள் திருமதி இராகவி அவர்கள் முதுகலை மருத்துவப் பட்டப்படிப்பில் (MD) தேர்ச்சி பெற்றதையொட்டி குடும்பத்துடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். திருமதி. துர்கா ஸ்டாலின் உடன் உள்ளார்.





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் 2 ஆவது கட்ட விரிவாக்கத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து மதுரை திருப்பாலை இ.எம்.ஜி யாதவா கல்லூரியில் நடைபெற்ற அரசு விழாவில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார் தலைமையில் மதுரை மாவட்டத்தில் இரண்டாம் கட்டமாக 66,287 பயனாளிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறுவதற்கான வங்கி அட்டைகளை வழங்கினார். உடன் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன், மாநகராட்சி துணை மேயர் நாகராஜன் ஆகியோர் உடன் உள்ளனர்.



இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதி கடலாடி ஊராட்சி ஒன்றியம் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து முதுகுளத்தூர் நீதிமன்றம் அருகில் தேசிய நெடுஞ்சாலையில் அமைக்கப்பட்ட புதிய நிழற்குடையை தமிழ்நாடு வனம் மற்றும் கதர் கிராம தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் திறந்து வைத்தார்.




திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் மத்திய ஒன்றித்திற்குட்பட்ட கொல்லபட்டி ஊராட்சி குட்டில்நாயக்கன் பட்டியில் வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தலைமையில் நடைபெற்றது. இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி

# கொல்லப்பட்டியில் ‘என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி’ ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் நடைபெற்றது!

ஒட்டன்சத்திரம், டிச. 15 -

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் மத்திய ஒன்றித்திற்குட்பட்ட கொல்லபட்டியில் ஊராட்சி குட்டில்நாயக்கன் பட்டியில் வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் ஒட்டன்சத்திரம் தொகுதி தேர்தல் பார்வையாளர் பரணி கே. மணி ஒன்றியச் செயலாளர் எஸ்.ஆர்.கே.பாலு அவைத்தலைவர் செல்வராஜ், துணைச் செயலாளர்கள் சிவபாக்கியம் ராமசாமி , முருகானந்தம், மாவட்டப் பிரதிநிதி சண்முகம், நகர்மன்ற தலைவர் திருமலைச்சாமி பொறுப்பாளர் ராமசந்திரன்,

முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சுமதி வீரன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் மணி பாரதி, உள்ளிட்ட வாக்குச்சாவடி முகவர்கள் முத்து வேல், ராமசந்திரன், சர்க்கரை முஹம்மது, சந்திரன், பாலமுருகன், குணசேக ரன், தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் பழனிசாமி, உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்பதை உறுதி செய்திடும் வகையில் மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் வடக்கு சட்டமன்றத் தொகுதி 26வது வார்டு நரிமேடு பகுதிக்குட்பட்ட 47வது பாகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. பங்கேற்று பல்வேறு ஆலோசனைகள் வழங்கி பேசினார், உடன் நரிமேடு பகுதி செயலாளர் சரவணன் அம்பலம், வட்டச் செயலாளர் ஆபித், மாவட்ட துணை செயலாளர் மூவேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் ஏ.கே.ஆறுமுகம் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள் கழகத்தினர் பாக முகவர்கள் பங்கேற்றனர்.

## நெல்லை சுரேஷ் – கோகுலவாணி சுரேஷ் ஏற்பாட்டில்

# துணை முதல்வர் பிறந்தநாள் விழா! 300 ஆட்டோ ஓட்டுனர்களுக்கு சீருடைகள்!

## மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ. – மேயர்.ராமகிருஷ்ணன் வழங்கினர்!

நெல்லை, டிச. 15 -

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் கழக இளைஞர் அணி செயலாளரும் துணை முதல்வருமான உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட துணை செயலாளர் எஸ்.வி.சுரேஷ் மாமன்ற உறுப்பினர் கோகுலவாணி சுரேஷ் ஏற்பாட்டில் நெல்லை வண்ணார் பேட்டையில் 300 ஆட்டோ ஓட்டுநர்கள், ஏழை மக்களுக்கு இலவச சீருடை கள், உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வு நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளை சட்ட மன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப் தலைமையில் நெல்லை மாநகராட்சி மேயர் கோ.ராமகிரு ஷ்ணன் முன்னிலையில் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து 300 ஆட்டோ ஓட்டுனர்களுக்கு இலவச சீருடையும், ஏழை,எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டது.

நிகழ்வில் மாவட்ட அவைத் தலைவர் முருகன்,தலைமை செயற்க்குழு உறுப்பினர் ஏ.எல்.எஸ். லெட்சுமணன்,நெல்லை கிழக்கு மாநகர பொறுப்பாளர் தினேஷ்,அரசு வழக்கறிஞர் பா.கந்தசாமி,பகுதி செயலாளர்கள் துபை சாகுல்,டாக்டர் சங்கர்,மேலப்பாளையம் மண்டல சேர்மன் கதீஜா இக்லாம் பாசிலா, மாமன்ற உறுப்பினர்கள் ஜூலியட் மேரி, பொன் தங்கராஜ், மாநகர இளைஞரணி அமைப்பாளர் கருப்பசாமி கோட்டையப்பன்,வட்ட செயலாளர்கள் ராஜா, பிரேம் கணேஷ்,வட்டப் பிரதிநிதி சுந்தர வேலன்,முத்துக்குமார்,சிவா, பெட்டிக் கடை சங்கர், நைனா, கழக பேச்சாளர்கள் நெல்லை முத்தையா, சி.பா.ராவணன்,பயர் குமார்,மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் செல்வம்,பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் துர்க்காராம், பகுதி மாணவரணி அமைப்பாளர் லெட்சுமணன் உட்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை நெல்லை மத்திய மாவட்ட துணை செயலாளர் எஸ்.வி. சுரேஷ், மாமன்ற உறுப்பினர் கோகுலவாணி சுரேஷ் ஆகியோர் செய்திருந்தனர்.